செய்தி வெளியீடு எண்: 928 நாள்: 17.12.2018

# தமிழகத்தில் உள்ள 528 பேரூராட்சி வார்டுகளில் மறுவரையறை அரசிதழ் வெளியீடு

தமிழகத்தில் உள்ளாட்சிகளின் வார்டுகளை 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையாக கொண்டு, மறுவரையறை செய்வதற்காக தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி பேரூராட்சிகளின் அனைத்து வார்டுகளிலும் சமமான மக்கள் தொகை அமையுமாறு வார்டுகள் மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வரைவு வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டது குறித்த விவரங்கள், அனைத்து பேரூராட்சிகளிலும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. பொதுமக்கள் மற்றும் இதர பிரதிநிதிகளின் கருத்து மற்றும் ஆட்சேபணைகள் பரிசீலிக்கப்பட்டு, விதிகளின்படி தற்போதுள்ள 8288 வார்டுகளின் எண்ணிக்கையில் மாற்றமின்றி வார்டுகளை மறுவரையறை செய்யப்பட்டன.

தமிழக அரசு, வார்டுகள் மறுவரையரை செய்யப்பட்டது குறித்து அரசிதழில் வெளியிடப்போவதாக அறிவித்ததற்கு இணங்க, 528 பேரூராட்சிகளில் உள்ள 8288 வார்டுகளின் மறுவரையறை மற்றும் வார்டு எல்லைகள் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல், சிறப்பு அரசிதழில் 14.12.2018 அன்று வெளியிட்டது. இந்த அரசிதழ் தமிழக அரசின் இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். இந்த அரசிதழை எழுதுபொருள், அச்சுத்துறை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9